# மாதிரி வினாத்தாள் 2019 – 2020 - V

## பத்தாம் வகுப்பு

## மொழிப்பாடம் : தமிழ்

நேரம் : 15 நிமிடம் + 3.00 மணி　　　　மதிப்பெண்கள் : 10

### பகுதி – I (மதிப்பெண்கள் : 15)

i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

**15 x 1 = 15**

1. **செய்தி – 1 :** ஒவ்வோர் ஆண்டும் ஜூன் 15ஆம் நாளை உலகக் காற்று நாளை கொண்டாடி வருகிறோம்.

**செய்தி – 2 :** காற்றாலை மின் உற்பத்தியில் இந்தியாவில் தமிழகம் இரண்டாமிடம் என் னைக்குப் பெருமையே என்கிறது காற்று.

**செய்தி – 3 :** காற்றின் ஆற்றலைப் பயன்படுத்திக் கடல்கடந்து வணிகம் செய்து அதில் வெற் கண்டவர்கள் தமிழர்கள்!

அ. செய்தி 1 மற்றும் சரி　　　　ஆ. செய்தி 1, 2 ஆகியன சரி

இ. செய்தி 3 மட்டும் சரி　　　　ஈ. செய்தி 1, 3 ஆகியன சரி

2. "சங்க இலக்கியங்கள், ஐந்திணைகளுக்குமான ஒழுக்கங்களை இரு திணைகளு பயன்பெற எடுத்தியம்புகின்றன. – இத்தொடரில் அமைந்துள்ள தொகை சொற்களின் பொருத்தமான விரியைக் கண்டறிக.

அ. குறிஞ்சி, முல்லை, செய்தல், பாலை – நல்வினை, தீவினை

ஆ. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை – உயர்திணை, அஃறிணை

இ. குறிஞ்சி, முல்லை, நெய்தல், பாலை, மருதம் – அறம், பொருள், இன்பம்

ஈ. குறிஞ்சி, முல்லை, பலை, காடு, வயல் – பனை, தினை

3. கரகாட்டத்தைக் கும்பாட்டம் என்றும் குடக்கூத்து என்றும் கூறுவர். இத்தொடருக்கா வினா எது?

அ. கரகாட்டம் என்றால் என்ன?

ஆ. கரகாட்டம் எக்காலங்களில் நடைபெறும்?

இ. கரகாட்டத்தின் வெவ்வேறு வடிவங்கள் யாவை?

ஈ. கரகாட்டத்தின் வேறு பெயர்கள் யாவை?



4. 'வீட்டைத் துடைத்துச் சாயம் அடித்தல்' இவ்வடி குறிப்பிடுவது ..........

அ. காலம் மாறுவதை　　　　ஆ. வீட்டைத் துடைப்பதை

இ. இடையறாது அறப்பணி செய்தலை　　　　ஈ. வண்ணம் பூசுவதை

5. 'சென்றிடுவீர் எட்டுத்திக்கும் – கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்' – பாரதியாரின் இக்கூற்று உணர்த்தும் கருத்து –

அ. பலதுறை நூல்கள் தமிழில் உருவாக்கப்பட வேண்டும்.

ஆ. பலகலைகள் தமிழில் புதிதாகத் தோன்ற வேண்டும்.

இ. உலகெங்கும் காணப்படும் செல்வங்கள் தமிழகத்தில் வந்து சேர்தல் வேண்டும்.

ஈ. கலைச் செல்வங்களை உலகம் முழுவதும் பயணம் செய்து கண்டுகளிக்க வேண்டும்.

6. பழமொழிகளைப் பொருத்துக.

அ. ஆறில்லா ஊருக்கு　–　1. சோற்றுக்கு ஒரு சோறு பதம்

ஆ. உப்பில்லாப் பண்டம்　–　2. நூறு வயது

இ. நொறுங்கத் தின்றால்　–　3. குப்பையிலே

ஈ. ஒரு பானை　–　4. அழகு பாழ்

அ) அ – 4, ஆ – 1, இ – 3, ஈ – 2　　　　ஆ) அ – 4, ஆ – 3, இ – 2, ஈ – 1

இ) அ – 2, ஆ – 4, இ – 1, ஈ – 3　　　　ஈ) அ – 3, ஆ – 1, இ – 4, ஈ – 2

7. திணைவழுவமைதி –

அ. 'இந்தப் பாப்பா தூங்கமாட்டாள்' என்று தன்னையே குழந்தை குறிப்பிடுவது.

ஆ. இரவெல்லாம் நாய் கத்திக்கொண்டே இருந்தது.

இ. 'வாடாச் செல்லம்' என்று தாய் மகளை அழைப்பது.

ஈ. 'என் தங்கை வந்தாள்' என்று பசுவைக் குறிப்பிடுவது.

8. சுதந்திர இந்தியாவின் மகத்தான சாதனையும் சவாலுமாக ஜெயகாந்தன் கருதுவது.

அ. அரசின் நலத்திட்டங்களைச் செயல்படுத்துதல்

ஆ. பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காத்தல்.

இ. அறிவியல் முன்னேற்றம்　　　　ஈ. வெளிநாட்டு முதலீடுகள்

9. தமிழ்த்தொண்டு என்னும் தொடர் –

அ. இருபெயரொட்டுப் பண்புத்தொகை　　　　ஆ. அன்மொழித்தொகை

இ. உருபும் பயனும் உடன்தொக்கத் தொகை　　　　ஈ. வேற்றுமைத்தொகை

10. 'உனதருளே பார்ப்பன் அடியேனே' யாரிடம் யார் கூறியது?

அ. குலசேகராழ்வாரிடம் இறைவன்　　　　ஆ. இறைவனிடம் குலசேகராழ்வார்

இ. மருத்துவரிடம் நோயாளி

ஈ. நோயாளியிடம் மருத்துவர்

11. மரபுத்தொடருக்கான பொருளைத் தேர்க.

**ஆறப்போடுதல் -**

அ. தாமதப்படுத்துதல் ஆ. ஆற்றில் போடுதல்

இ. ஆறவைத்தல் ஈ. ஆற்றில் இறங்குதல்

**பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.**

"முத்தமிழ் துய்ப்பதால் முச்சங்கம் கண்டதால்
மெத்த வணிகலமும் மேவலால் - நித்தம்
அணைகிடந்தே சங்கத் தவர்காக்க ஆழிக்கு
இணைகிடந்த தேதமிழ் ஈண்டு."

12. இப்பாடல் இடம்பெற்ற நூல் -

அ. நற்றிணை ஆ. முல்லைப்பாட்டு

இ. குறுந்தொகை ஈ. தனிப்பாடல் திரட்டு

13. பாடலில் இடம்பெற்றுள்ள பொருத்தமான அணி.

அ. இரட்டுற மொழிதல் அணி ஆ. தீவக அணி

இ. வஞ்சப் புகழ்ச்சி அணி ஈ. நிரல் நிறை அணி

14. தமிழுக்கு இணையாய்ப் பாடலில் பொருத்தப்படுவது

அ. சங்கப் பலகை ஆ. கடல்

இ. அணிகலன் ஈ. புலவர்கள்

15. தொழிற்பெயர் அல்லாத சொல் –

அ. துய்ப்பதால் ஆ. மேவலால்

இ. அணிகலன் ஈ. கண்டதால்

## பகுதி –II (மதிப்பெண்கள் : 18)

### பிரிவு–1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க.** 4 x 2 =

**21 ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.**

16. ஹிப்பாலஸ் பருவக் காற்று குறித்து எழுதுக.

17. "சாந்தமானதொரு பிரபஞ்சத்தைச் சுமக்கின்றன ஒல்லித் தண்டுகள்" – இக்கவி அடிகள் உணர்த்தும் உள்ளழகை எழுதுக.

18. விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க.

அ) சாலைகளின் இடப்பக்கம் வண்டிகள் செல்வதே சாலை விதிகளில் முதன்மையா விதி.



ஆ) ஓட்டுநர் உரிமம், ஊர்தியின் பதிவுச் சான்றிதழ், ஊர்தியின் வழி மற்றும் காப்பீட்டுச் சான்றிதழ் போன்றவற்றை ஊர்தி ஓட்டுபவர் ஒவ்வொருவரும் கட்டாயமாகக் கையில் வைத்திருக்க வேண்டும்.

19. பாசவர், வாசவர், பல்நிண விலைஞர், உமணர் – சிலப்பதிகாரம் காட்டும் இவ்வணிகர்கள் யாவர்?

20. குறிப்பு வரைக – **'அவையம்'**

21. **'விடல்'** – என தொடங்கும் திருக்குறளை எழுதுக.

### பிரிவு–2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க.** 5 x 2 = 10

22. **'அறியேன்'** – பகுபத உறுப்பிலக்கணம் காண்க.

23. "தம்பி! எங்க நிக்கிறே?, "நீங்க சொன்ன எடத்துலதாண்ணே!, எதிர்த்தாப்புல ஒரு ம ஸ்டால் இருக்குது" - - இவ்வுரையாடலில் உள்ள பேச்சு வழக்கினை எழுத்து வழக்காக மாற்றுக.

24. கலைச்சொல் தருக.

அ) **Epic Literature** ஆ) **Folk Literature**

**குறிப்பு : செவிமாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா**

இரு சொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக.

அ) சிலை, சீலை ஆ) விடு, வீடு

25. தீவக அணியின் வகைகள் யாவை?

26. அ) ஓடிக்கொண்டிருந்த மின்விசிறி சட்டென நின்றவுடன் அறையில் உள்ளவர்கள் பேச்சு தடைபட்டது. இத்தொடரைத் தனிச்சொற்றொடர்களாக மாற்றுக.

ஆ) அழைப்புமணி ஒலித்தது. கயல்விழி கதவைத் திறந்தார் – தனிச் சொற்றொடர்களைக் கலவைத் தொடராக்குக.

27. "கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க்கு அடுக்கிய
கோடிஉண் டாயினும் இல்" – இக்குறளில் வரும் அளபெடைகளை எடுத்து எழுதுக.

28. சந்தக் கவிதையில் வந்த பிழைகளைத் திருத்தி எழுதுக.

"தேனிலே ஊரிய செந்தமிழின் – சுவை
தேரும் சிலப்பதி காரமதை
ஊனிலே உம்முயிர் உல்லவும் – நிதம்
ஓதி யுணர்த்தின் புருவோமே".

## பகுதி –III (மதிப்பெண்கள் : 18)

### பிரிவு–1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** 2 x 3 = 6

29. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

சிற்றூர் மக்களின் வாழ்வியல் நிகழ்வுகளில் பிரித்துப் பார்க்க இயலாக் கூறுகளாகத் திகழ்பவை நிகழ்கலைகள். இவை மக்களுக்கு மகிழ்ச்சியெனும் கனி கொடுத்துக் கவலையைப் போக்குகின்றன; சமுதாய நிகழ்வுகளின் ஆவணங்களாகவும் செய்திகளைத் தரும் ஊடகங்களாகவும் திகழ்கின்றன. பழந்தமிழ் மக்களின் கலை, அழகியல், புதுமை ஆகியவற்றின் எச்சங்களை அறிவதற்குத் தற்காலத்தில் நிகழ்த்தப்படும் கலைகள் துணைசெய்கின்றன.

அ. பழந்தமிழ் மக்களின் எந்தெந்த எச்சங்களை அறிவதற்கு நிகழ்கலைகள் துணைசெய்கின்றன?

ஆ. நிகழ்கலைகளின் பயன்கள் இரண்டினை எழுதுக.

இ. நிகழ்கலைகள் எப்பகுதி மக்களின் வாழ்வியல் கூறுகளில் ஒன்றாகத் திகழ்கின்றன?

30. முன்னுரையில் முகம் காட்டும் ஜெயகாந்தன் குறித்து எழுதுக.

31. வாழை இலையில் விருந்து என்பது தமிழர் பண்பாட்டுக் கூறுகளில் ஒன்று என்பதை விளக்குக.

### பிரிவு–2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** 2 x 3 = 6

**34 ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.**

32. முதல்மழை விழுந்ததும் என்னவெல்லாம் நிகழ்வதாக கு.ப.ரா. 'ஏர் புதிதா?' கவிதையில் கவிபாடுகிறார்?

33. நவீன கவிதையில் வெளிப்படும் நுண்மை உள்ளம், பூத்தொடுக்கும் நாட்டுப்புறப்பாடலில் வெளிப்படுவதை ஒப்பிட்டு எழுதுக.

| | |
|---|---|
| இறுக்கி முடிச்சிட்டால் | கையாலே வெடுத்தா – மாரிக்குக் |
| காம்புகளின் கழுத்து முறியும் | காம்பழுகிப் போகுமின்னு |
| தளரப் பிணைத்தால் | விரலாலே வெடுத்தா – மாரிக்கு |
| மலர்கள் தரையில் நழுவும் | வெம்பி விடுமென்று சொல்லி |
| வாசலில் மரணம் நிற்பதறிந்தும் | தங்கத் துரட்டி கொண்டு – மாரிக்குத் |
| வருந்தாமல் சிரிக்கும் | தாங்கி மலரெடுத்தார் |
| இந்தப் பூவை | **நாட்டுப்புறப் பாடல்** |
| எப்படித் தொடுக்க நான் **நவீன கவிதை** | |



34. அடிபிறழாமல் எழுதுக –

அ) "இவ்வொன்பான் ஒழுக்கமும் வழிபடும் பண்பே" – என முடியும் காசிக்காண்டப் பாடல்.

**(அல்லது)**

ஆ. "புல்லணியப் புலவீர் யான்……" எனத் தொடங்கும் திருவிளையாடற்புராணப் பாடல்..

### பிரிவு–3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** 2 x 3 = 6

35. நேற்றிரவு பெய்தமழை எல்லாம் தொட்டியை நிறைத்திருந்தது. வாழைத் தோப்பில் குட்டியுடன் நின்றிருந்த மாடு கத்தியது; தந்தை என்னிடம், "இலச்சுமி கூப்பிடுகிறாள், போய்ப்பார்" என்றார். "இதோ சென்றுவிட்டேன்" என்றவாறே அங்குச் சென்றேன். துள்ளிய குட்டியைத் தடவிக்கொடுத்து, 'என்னடா விளையாட வேண்டுமா?' என்று கேட்டு அவனை அவிழ்த்துவிட்டேன். என் தங்கை அங்கே வந்தாள். அவளிடம், "நீயும் இவனும் விளையாடுங்கள்" என்று கூறினேன். அவிழ்த்து விட்டபின் இலச்சுமி தொட்டியிலிருந்த நீரைக் குடித்தாள். – இப்பத்தியிலுள்ள வழுவமைதிகளைப் பட்டியலிடுக.

36. "உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்" – இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு காண்க.

37. அவந்தி நாட்டு மன்னன், மருதநாட்டு மன்னனுடன் போர்புரிந்து அந்நாட்டைக் கைப்பற்ற நினைக்கிறான்; அப்போர் நிகழ்வைப் புறப்பொருள் வெண்பாமாலை கூறும் இலக்கணத்தின் வழி சுருக்கமாக எழுதுக.

## பகுதி –IV (மதிப்பெண்கள் : 25)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** 5 x 5 = 25

38. அ) காலக்கணிதம் கவிதையில் பொதிந்துள்ள நயங்களைப் பாராட்டி எழுதுக.

கவிஞன் யானோர் காலக் கணிதம்
கருப்படு பொருளை உருப்பட வைப்பேன்!
புவியில் நானோர் புகழுடைத் தெய்வம்
பொன்னினும் விலைமிகு பொருளென் செல்வம்!
இவைசரி யென்றால் இயம்புவதென் தொழில்
இவைதவ றாயின் எதிர்ப்பதென் வேலை!
ஆக்கல் அளித்தல் அழித்தல்இம் மூன்றும்
அவனும் யானுமே அறிந்தவை; அறிக!

**(அல்லது)**

ஆ) மனோன்மணீயம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலையும் பெருஞ்சித்திரனாரின் தமிழ் வாழ்த்தையும் ஒப்பிட்டு மேடைப்பேச்சு ஒன்றை உருவாக்குக.

39\. அ) 'பள்ளித் தூய்மை – செயல்திட்டம்' ஒன்றை உருவாக்கி மாணவர்களின் சார்பாக மாணவர் தலைவரான நீங்கள், உங்கள் பள்ளியின் தலைமையாசிரியருக்குக் கடிதம் ஒன்று எழுதுக.

(அல்லது)

ஆ) உங்கள் பகுதியில் ஏற்பட்ட கடும்புயலில் சாய்ந்துவிட்ட மரங்களை அகற்றியும், பழுதுபட்ட சாலைகளைச் சீரமைத்தும், பழுதடைந்த மின்கம்பங்களைச் சரிசெய்தும் தருமாறு மாநகராட்சி ஆணையருக்குக் கடிதம் ஒன்று எழுதுக.

40\. காட்சியைக் கண்டு கவினுறு கவிதை ஒன்றை எட்டு வரிகளில் எழுதுக.



41\. எழுத்தர் பணியினை வேண்டி, வேலைவாய்ப்பிற்காக, கொடுக்கப்பட்ட தன்விவரப் பட்டியலைப் பூர்த்தி செய்க.

<u>பணி வாய்ப்பு வேண்டி தன்விவரப் பட்டியல்</u>

1\. பெயர் :

2\. பாலினம் :

3\. பிறந்த நாள் மற்றும் வயது :

4\. தேசிய இனம் :

5\. பெற்றோர் / பாதுகாவலர் பெயர் :

6\. வீட்டு முகவரி :

7\. தொலைபேசி / அலைபேசி எண் :

8\. பத்தாம் வகுப்பில் பெற்ற மதிப்பெண்கள் :

9\. தாய்மொழி :

10\. பயின்ற மொழிகள் :

11\. தட்டச்சு :

12\. கணினி :



மேற்கண்ட விபரங்கள் அனைத்தும் உண்மையென உறுதிகூறுகிறேன். தங்கள் நிறுவனத்தில் ........................ பணியினைத் தந்தால் என் பணியைச் சிறப்பாகவும் உண்மையாகவும் செய்வேன் என உறுதியளிக்கிறேன்.

இப்படிக்கு,

தங்கள் உண்மையுள்ள

இடம்

நாள் :

42\. அ) நீங்கள் விரும்பிப் படித்த நூல் ஒன்றிற்கான மதிப்புரையினைக் குறிப்புகளைப் பயன்படுத்தி எழுதுக.

<u>குறிப்புகள் :</u> நூலின் தலைப்பு – நூலின் மையப்பொருள் – மொழி நடை – சிறப்புக்கூறு – நூல் ஆசிரியர்.

(அல்லது)

ஆ) மொழிபெயர்க்க.

Respected ladies and gentlemen, I am Ilangovan studying tenth standard. I have come here to say a few words about out Tamil culture. Sangam literature shows that Tamils were best in culture and civilization about two thousand years ago. Tamils who have defined grammar for language have also defined grammar for life. Tamil culture is rooted in the life styles of Tamils throughtout India, Srilanka, Malaysia, Singapore, England and Worldwide. Though our culture is very old, it has been updated consistently. We should feel proud about our culture. Thank you one and all.

<u>குறிப்பு : செவிமாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா.</u>

**உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

ஒரு மொழி பொதுமக்களாலும் அதன் இலக்கியம், புலமக்களாலும் அமையப்பெறும். தமிழ்ப் பொதுமக்கள் உயர்ந்த பகுத்தறிவுடையர். எத்துணையோ ஆராய்ச்சி நடந்துவரும் இக்காலத்திலும் எத்துணையோ மொழிகளினின்று கடன்கொண்ட ஆங்கில மொழியிலும் நூலிலும் இலையைக் குறிக்க Leaf (லீஃப்) என்னும் ஒரேசொல் உள்ளது. ஆங்கில நூல்களிலும் வேறு பல வகைகளில் இலைகளைப் பாகுபாடு செய்தனரேயன்றி, தமிழ்ப்பொதுமக்களைப் போல வன்மை மென்மை பற்றித் தாள், இலை, தோகை, ஓலை எனப் பாகுபாடு செய்தாரில்லை. இத்தகைய பாகுபாடு ஏனைய உறுப்புகளுக்குள்ளும் செய்யப்பட்டது.

தமிழ்நாடு எத்துணைப் பொருள்வளமுடையதென்பது, அதன் விளைபொருள் வகைகளை நோக்கினாலே விளங்கும்.

i) ஒரு மொழியும், அதன் இலக்கியமும் எவ்வாறு அமையும்?

ii) தமிழ்மக்கள் இலைகளை எவ்வாறு பாகுபாடு செய்தனர்?

iii) தமிழ்நாட்டின் பொருள்வளத்தினை எவ்விதம் விளங்கிக்கொள்ளலாம்?

iv) மொழி ஆராய்ச்சிக்கு ஓர் எடுத்துக்காட்டு தருக.

v) இப்பத்திக்குப் பொருத்தமான தலைப்பு ஒன்று தருக.

## பகுதி – V (மதிப்பெண்கள் : 24)

**அனைத்து வினாக்களுக்கும் விரிவாக விடையளிக்க.** *3 x 8 = 24*

43\. அ) சங்க இலக்கியங்களில் காணப்படும் ஐந்து அறக்கருத்துகளைத் தொகுத்து, அவை இன்றும் தேவையே என்பதனை நிறுவுக.

(அல்லது)

ஆ) காற்று பேசியதைப்போல நிலம், நீர், வானம் பேசுவதாகவும் அவை இன்றைய சுற்றுச்சூழல் பாதுகாப்பினை வலியுறுத்துவதாகவும் ஓர் உரையாடல் அமைக்க.

44\. அ) நிகழ்வுகளைத் தொகுத்து அறிக்கை எழுதுக.

> **மகளிர் நாள் விழா**
>
> இடம் : பள்ளிக்கலையரங்கம் நாள் : 08.03.2019
>
> கலையரங்கத்தில் ஆசிரியர்கள், மாணவர்கள் கூடுதல் – தலைமையாசிரியரின் வரவேற்பு – சிறப்பு விருந்தினர் இதழாளர் கலையரசியின் சிறப்புரை – ஆசிரியர்களின் வாழ்த்துரை – மாணவத்தலைவரின் நன்றியுரை.

(அல்லது)

ஆ) பசித்தவருக்கு உணவிடுதல் என்ற அறச்செயல், 'அன்னமய்யா' புதிதாக வந்தவருக்கு உணவிட்ட செயலோடு ஒத்திருத்தலை 'கோபல்லபுரத்து மக்கள்' கதைவழி விளக்கி எழுதுக.

45\. அ) குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதி, தலைப்பு ஒன்று தருக.

**குறிப்புகள் :** முன்னுரை – மொழிபெயர்ப்பு நூல்கள் – எட்டுத்திக்கின் கலைச்செல்வங்கள் கொணர்ந்திங்கு சேர்ப்பீர் – மொழிபெயர்ப்பும் கல்வியே – முடிவுரை.

(அல்லது)

ஆ) உங்கள் பகுதியில் நடைபெற்ற அரசுப்பொருட்காட்சிக்குச் சென்று வந்த நிகழ்வைக் குறிப்புகளைப் பயன்படுத்திக் கட்டுரையாக்குக.

**குறிப்புகள் :** முன்னுரை – பொருள்காட்சி நடைபெறும் இடம் – பல்வேறு விளையாட்டு அமைப்புகள் – பலவிதமான வணிகம் – அரசின் நலத்திட்ட அரங்குகள் – மகிழ்வூட்டும் மக்கள் கூட்டம் – பாரம்பரிய நிகழ்கலைகள் – முடிவுரை.